மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.08/2021
அ.வ.எண்.49/2010

புண்ணியமூர்த்தி ... மனுதாரர்/5 ம்பிரதிவாதி

/எதிராக/

1. செங்கோட கவுண்டர்
2. ராமசாமி (இறந்துவிட்டார்)
3. ராமாயி ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

4. ராமசாமி
5. கே.ஆர்.மணி
6. சின்னப்பகவுண்டர் (இறந்துவிட்டார்)
7. ராமசாமி (இறந்துவிட்டார்)
8 தேவராஜன்
9. பழனியம்மாள்
10. ராஜாத்திமணி
11. காளியம்மாள்
12. பொன்னம்மாள்
13. வீரம்மாள்
14. ரதி
15. தனம் (எ) தனலட்சுமி ...எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4, 6 முதல் 13 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 23.08.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.ஸ்டாலின்ராஜா அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.எம்.சி.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 2, 6 மற்றும் 7 ம்எதிர்மனுதாரர்கள் இறந்தவராகவும், 4, 5, 8 முதல் 13 ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

தாவாவில் வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 02.04.2018 ல் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்று மனுதாரர் வெளியூர் சென்றிருந்ததால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக முடியாமல் போய்விட்டது. வழக்கின் சூழ்நிலை குறித்து வழக்கறிஞரிடம் கேட்ட போது மனுதாரருக்கு எதிராக 02.04.2018 ல் ஒருதலைப்பட்ச உத்தரவானதை தெரிவித்தார். மனுதாரர் வெளியூரில் வேலை செய்து வந்ததின் காரணமாக தாவாவில் உடனடியாக இம்மனுவை தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது. மேற்படி 11 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் தாக்கல் செய்த கூடுதல் பதிலுரை மற்றும் குறுக்கு விசாரணையை மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்வதாக மனுதாரர் உறுதியளிக்கிறார். எனவே கடந்த 02.04.2018 ம் தேதியன்று மனுதாரர்/5 ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்/5 ம்பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1 ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு 3 ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனுதாரர் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ் தாக்கல் செய்யும் 2 வது மனுவாகும். கடந்த 02.04.2018 ம் தேதியன்று வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் காலகட்டத்தில் மனுதாரர் வெளியூர் செல்வதாக அறிந்த மனுதாரர் தனது வழக்கறிஞரிடம் அதுபற்றி தெரிவித்திருந்தால் உரிய மனுக்களை தாக்கல் செய்திருக்கலாம் அல்லது மனுதாரரின் வழக்கறிஞர் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய தேவையான விவரங்களை மனுதாரர் வழக்கறிஞருக்கு முன்கூட்டியே தெரிவித்திருக்கலாம். ஆனால் 20.04.2018–ல் ஆஜராகாமல் இருந்துவிட்டு பொய்யான காரணங்களை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

(ii) இம்மனுவானது 3 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ளதால் காலவரையறைச் சட்டம் உருபு 137 ன்படி மனு பாதிப்புக்கு உள்ளானதாகும். 2010 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை காலம் கடத்தும் எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 11 முதல் 13 பிரதிவாதிகள் கூடுதல் பதிலுரையை தன் பதிலுரையாக

ஏற்க வேண்டும் என்று கோர மனுதாரர் தனியாக தான் மனு செய்ய வேண்டும். உரிய சட்ட விதிகளை, நெறிமுறைகளை, வகைமுறைகளை பின்பற்றாமல் பிரமாண பத்திரிக்கையில் ஒரு பரிகாரமும், மனுவில் வேறு பரிகாரமும் கோரி மனுதாரர் மனு செய்துள்ளதால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ ஏதும் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்/5ம்பிரதிவாதி தரப்பில் தாவாவில் வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 02.04.2018ல் வாய்தா போடப்பட்டிருந்தது எனவும், அன்று மனுதாரர் வெளியூர் சென்றிருந்ததால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக முடியாமல் போய்விட்டது எனவும், வழக்கின் சூழ்நிலை குறித்து வழக்கறிஞரிடம் கேட்ட போது மனுதாரருக்கு எதிராக 02.04.2018ல் ஒருதலைப்பட்ச உத்தரவானதை தெரிவித்தார் எனவும், மனுதாரர் வெளியூரில் வேலை செய்து வந்ததின் காரணமாக தாவாவில் உடனடியாக இம்மனுவை தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது எனவும், எனவே கடந்த 02.04.2018ம் தேதியன்று மனுதாரர்/5ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்/5ம்பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1, 3ம்எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ் தாக்கல் செய்யும் 2வது மனு எனவும், கடந்த 02.04.2018ம் தேதியன்று வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் காலகட்டத்தில் மனுதாரர் வெளியூர் செல்வதாக அறிந்த மனுதாரர் தனது வழக்கறிஞரிடம் அதுபற்றி தெரிவித்திருந்தால் உரிய மனுக்களை தாக்கல்

செய்திருக்கலாம் அல்லது மனுதாரரின் வழக்கறிஞர் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய தேவையான விவரங்களை மனுதாரர் வழக்கறிஞருக்கு முன்கூட்டியே தெரிவித்திருக்கலாம் எனவும், ஆனால் 20.04.2018–ல் ஆஜராகாமல் இருந்துவிட்டு பொய்யான காரணங்களை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) 1,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவானது 3 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ளதால் காலவரையறைச் சட்டம் உருபு 137 ன்படி மனு பாதிப்புக்கு உள்ளானதாகும் எனவும், 2010 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை காலம் கடத்தும் எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) மனுதாரர் வழக்குரைஞர் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காக மனுவை அனுமதிக்கவேண்டும் என வாதிட்டார். 1, 3 எதிர்மனுதாரரின் வழக்குரைஞர் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காகவும், கீழ்க்கண்ட முன்தீர்ப்பின்படிக்கும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் எனவும் வாதிட்டார்.

Visalakshi Vs Umapathi and Others

CRP.PD.No.4082/2013

Order 9 Rule 7 Limitation Period 3 Years as per Article 137 of Limitation Act.

(v) 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்திய விசாலாட்சி எதிர் உமாபதி மற்றும் சிலர் என்ற முன்தீர்ப்பினை பரிசீலனை செய்ததில் காலவரையறைச் சட்டம் உருபு 137 ன் படிக்கு ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பித்ததிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 ன்கீழான மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என மாண்புமிகு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது தெரியவருகிறது. ஆனால் மேற்படி விசாலாட்சி வழக்கையும் பரிசீலனை செய்து 01.12.2016 ல் எஸ்.சாந்தா எதிர் எம்.எஸ்.எம்.கே.பாக்கியம் என்ற வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் கீழ்கண்டவாறு கூறுகிறது.

<u>எஸ்.சாந்தா எதிர் எம்.எஸ்.எம்.கே.பாக்கியம்</u>

"An application filed under Order 9 Rule 7 of the Civil Procedure Code, no limitation period is prescribed."

(vi) ஆகவே மேற்படி விசாலாட்சி வழக்கை பரிசீலனை செய்ததற்கு பின்னிட்டு சாந்தா வழக்கில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழான மனுக்களுக்கு காலவரையறை இல்லை என தீர்மானித்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் காலவரையறைச் சட்டம் குறித்து இரண்டு வழக்குகளிலும் முரண்பட்ட தீர்ப்பு உள்ள நிலையில் கீழ்க்கண்ட சட்ட முதுமொழி இவ்வழக்கிற்கு பொருந்தக்கூடிய வகையில் உள்ளது.

" Judicis posterioribus fides est adhibenda

Trust should be put in the later decisions".

" Judicia posteriora sunt in lege fortiora

The later decision are stonger in law".

(vii) மேற்படி முதுமொழியின் படிக்கு பின்னிட்ட தீர்ப்புதான் சட்டத்தின் படிக்கு வலுவானது என்பது தெரியவருகிறது. இந்நிலையில் மேற்படி விசாலாட்சி வழக்கு 2015ல் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் சாந்தா வழக்கு 2016ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் பின்னிட்ட தீர்ப்பான சாந்தா வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு தான் இம்மனுவிற்கு பொருந்தும். மேலும் மேற்படி விசாலாட்சி வழக்கையும் பரிசீலனை செய்ததற்கு பின்னிட்டு சாந்தா வழக்கில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழான மனுவிற்கு காலக்கெடு இல்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எஸ்.சாந்தா எதிர் எம்.எஸ்.எம்.கே.பாக்கியம் முன்தீர்ப்பின்படிக்கு இம்மனு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(viii) 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிரமாண பத்திரிக்கையில் ஒரு பரிகாரமும், மனுவில் வேறு பரிகாரமும் கோரி மனுதாரர் மனு செய்துள்ளதால் மனு நிலைக்கதக்கதல்ல என கட்சி செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆனால் பிரமாணப்பத்திரிக்கையிலும், மனுவிலும் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய ஒரே பரிகாரத்தை தான் கோரியுள்ளது தெரிய வருவதால் எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(ix) இவ்வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கில் எதிர்க்கட்சி செய்ய மனுதாரருக்கு ஓர் வாய்ப்பு வழங்குவது நீதிக்கு உகந்தது எனவும், 1, 3 எதிர்மனுதாரர்களின் அனைத்து கட்சிகளும் ஏற்புடையதல்ல எனவும், இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் 2018—ல் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்னிட்டு 3 ஆண்டுகள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரால் 1, 3 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர் 1, 3 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.750/— செலவுத்தொகையாக 03.09.2021—க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர், 1, 3 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.750/—செலவுத்தொகையாக 03.09.2021 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 04.09.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:— இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— </u>இல்லை

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.